2019 ஜூலை 18] [பேரவைத் தலைவர்]

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.902,86,71,000/–, மூலதனக் கணக்கில் ரூ.7,10,22,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (19–7–2019), வெள்ளிக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 8–57 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

50. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகமானது அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நீராவி நிலக்கரியை கொள்முதல் செய்தது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் 16(a)-ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 9–10–2018 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 334–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

51. மத்திய உயர்கணினி மேம்பாட்டு மையத்திடமிருந்து தமிழ்நாடு மின்னணு கழகத்தின் வாயிலாக மின்னணு பொருட்களுக்கான தேவையான குறிப்பீடுகள் மற்றும் சான்றளித்தல், பாதுகாப்பு நோக்கங்கள் குறித்த மின்னணுப் பொருட்களின் மதிப்பீடு மற்றும் அனைத்து பாதுகாப்பு சிறப்புப் பகுதிக்கான சேவைகளைப் பெறுவது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் 16(bb)*-ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 3–5–2019 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 136–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

52. சந்தை தகவல் அமைப்புமுறை இயங்குதள மேம்பாட்டு பணியை, ஓரளவு வறண்ட வெப்ப மண்டலத்திற்கான பன்னாட்டு பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனத்திடம் (ICRISAT) *ஒப்படைக்கவும், ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப இயங்குதள கூறுகளிலிருந்தும் வழங்கல் தொடர் மேலாண்மை திட்டத்தின் ஏனைய கூறுகளிலிருந்தும்* NITI Aayog*-ன்* D3Si *முயற்சிகளின்கீழ், தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் பொது–தனியார் கூட்டாண்மை முறையில் வழங்கல் தொடர் மேலாண்மைத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான தொழில்நுட்ப ஆலோசகராக ஓரளவு வறண்ட வெப்ப மண்டலத்திற்கான பன்னாட்டு பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனத்தை* (ICRISAT) *ஈடுபடுத்துவது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16*(bb)*-ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 7–5–2019 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 137–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

53. சுயசார்பு நிலக்கரி கையாளும் முனையத்தில், பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான ஒப்பந்தத்தை செயல்படுத்துவதற்காக, நேமக அடிப்படையில், சென்னையிலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தின் (IIT-M) *கடல்சார் பொறியியல் துறைக்கு ஒப்பந்தத்திற்கு பிந்தைய ஆலோசனை*

குறித்த பணிகளை வழங்குவது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் 16(bb)-ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 14—5—2019 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 147—ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

54. உத்தேசிக்கப்பட்ட விரிவான மறுவாழ்வு/மறு கட்டுமானம் மற்றும் வட சென்னை அனல் மின் நிலையத்தில் (NCTPS) சாம்பல் குட்டையின் கரையை (Ash Dyke Bund) எழுப்புவதற்காக நேமக அடிப்படையில், சென்னையிலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தின் (IIT-M) கட்டடப் பொறியியல் துறைக்கு ஒப்பந்த ஆலோசனை குறித்த பணிகளை வழங்குவது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் 16(bb)-ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 14—5—2019 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 148—ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

55. 2017—2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

56. 2016—2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஊரக வீட்டு வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுக்கழகத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

57. 2017—2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்—ஆங்கிலம்)